NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2014

# TAMIL HOME LANGUAGE: PAPER I

Time: 2 hours 70 marks

---

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This question paper consists of 6 pages. Please make sure that your question paper is complete.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions.
4. Number your answers exactly as the questions are numbered.
5. It is in your own interest to write legibly and present your work neatly.

---

IEB Copyright © 2014

கீழ்வரும் பகுதியை நன்றாகப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக.

# தன்னலமற்ற சூரிஸ்

சபா மாநிலத்தில் காயாங் என்னும் சிறிய கிராமம் இருக்கிறது. பட்டணத்தில் இருந்து வெகுதூரத்திலிருந்த அந்தக் கிராமம் வசதிகளற்றதாய் இருந்தது. அங்குக் குறைந்த எண்ணிக்கையில் மக்கள் இருந்தும் கூட அவர்களது நலன் கருதி அரசு ஒரு பள்ளிக்கூடத்தைக் கட்டியது. அப்பள்ளிக்குச் சூரிஸ் என்பவர் ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.



பட்டணப்புறத்தில் வாழ்ந்து பழக்கப்பட்ட சூரீஸ் கிராமப்புற வாழ்க்கை மிகச் சிரமமாக இருக்கும் என்பதை உணர்ந்தார். ஆயினும் சூரீஸ் சேவை மனப்பான்மை உடையவராயிருந்ததால் அங்குப் பணியாற்ற மகிழ்வோடு சென்றார். தம் குடும்பத்தாருடன் அக்கிராமத்திலேயே தங்கித் தம் தொழிலைத் தொடங்கினார். ஆற்றல் நிறைந்த சூரீஸ் அங்குள்ள குழந்தைகளுக்குச் சிறப்பாகப் போதித்தார். மாலை வேளைகளில் சிறப்பு வகுப்புகள் நடத்தினார். அவர்களுடன் அன்போடு பழகி நற்பண்புகளை ஊட்டினார்.

வாரநாட்களில் முதியோர் வகுப்பு நடத்தினார். அவர்களுக்கு நாட்டு நடப்பு, சுகாதார வாழ்க்கை போன்ற பலவற்றையும் போதித்தார். எழுதப் படிக்கக் கற்றுக்கொண்ட அவர்கள் தங்களது வாழ்க்கை நிலைபற்றித் தெரிந்து கொள்ளும் நிலையை அடைந்தனர். கிராமத்திலுள்ள குறைகளைப் போக்க அவர்களோடு சேர்ந்து அவரும் உழைத்தார். ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டே தமது ஓய்வு நேரத்தில் கிராம மக்களின் உயர்வுக்காகப் பாடுபட்டார்.

கிராம மக்களிடம் காலங்காலமாகக் குடிகொண்டிருந்த சில தீய பழக்கவழக்கங்களைப் போக்க முயன்றார். கிராம மக்களும் அவருடைய முன்மாதிரியைப் பார்த்துத் திருந்தினர். மது அருந்துதல், புகைபிடித்தல் இன்னும் பிற தவறான பழக்கவழக்கங்களையும் விட்டொழித்தனர்.

சூரீஸின் அயராத உழைப்பாலும் தியாக உணர்வுடன் கூடிய சேவையாலும் அக்கிராமம் சிறிது சிறிதாக வளர்ச்சியடைய ஆரம்பித்தது. அதுமட்டுமல்லாமல் அக் கிராமத்துக் குழந்தைகளும் கல்வியில் மேன்மையடைந்தனர். பலர் மேற்படிப்புக்காகப் பட்டணத்திற்குச் சென்றனர்.

IEB Copyright © 2014

1.1 கோடிட்ட இடங்களில் சரியான சொற்களால் நிறப்புக:

1.1.1 சப மாநிலத்தில் காயாங் என்னும் ________________இருக்கிறது. (1)

1.1.2 மாலை ________________சிறப்பு வகுப்புகள் நடத்தினர். (1)

1.1.3 வார நாட்களில் ____________________ வகுப்பு நடத்தினர். (1)

1.1.4 அது மட்டுமல்லாமல் அக்கிராமத்துக் குழந்தைகளும்__________ மென்மையடைந்தனர். (1)

1.2 சரியான விடை எழுதுக.

1.2.1 கதையில் வருகிற கிராமத்தின் பள்ளியில் யார் ஆசிரியராக நியமிக்கப்பட்டார் ? (2)

1.2.2 சூரிச் எவ்விதத்தில் அங்குள்ள மாணவர்களுக்குப் போதித்தார் ? (2)

1.2.3 முதியோர் வகுப்பில் ஆசிரியர் எதை போதித்தார் (2)

1.2.4 எந்த தவறான பழக்கங்களை விட்டோழித்தனர் ? (2)

1.2.5 எதை மனதில் வைத்துக்கொண்டு அரசு ஆசிரியரை பாராட்டியது (2)

1.3 எது உண்மை, எது உண்மை அல்ல என்று எழுத

1.3.1 கதையில் வருகின்ற கிராமம் , பட்டணத்தில் இருந்து வெகுதூரத்திலிருந்தது. (2)

1.3.2 சூரிச்சிற்கு இக்கிராமப் பள்ளியில் கற்றுக்கொடுக்க விருப்பம் இல்லை. (2)

1.3.3 குழந்தைகளுடன் சூரிச் அன்போடு பழகினார். (2)

1.3.4 சில தீய பழக்கங்களை போக்க சூரிச் ஒன்றும் செய்ய வில்லை (2)

1.3.5 பல மாணவர் மேற்படிப்புக்காகப் பட்டணத்திற்குச் சென்றனர். (2)

1.4 ஒருமைக்கு பன்மை எழுதுக

1.4.1 பள்ளி (1)

1.4.2 இடம் (1)

1.5 <u>சேர்த்து எழுது.</u>

1.5.1 இந்த + கதை (1)

1.5.2 அவனை + பார். (1)

1.6 <u>எதிர்ச் சொல் தருக.</u>

1.6.1 முன் (1)

1.6.2 முடிவு (1)

**30 marks**

## <u>பகுதி இரண்டு.</u>

2. <u>கீழ்வரும் பகுதியை சுருக்கி எழுதுக. ( சுமார் 30 - 40 சொற்கள் )</u>

அப்பொழுது அங்கு ஒரு வேடன் வலையுடன் வந்தான். அவன் மயிலைப் பிடிக்கப் பல நாட்களாகக் காத்திருந்தான். வேடனைக் கண்ட மற்ற பறவைகள் அங்கிருந்து பறந்து சென்று மரக்கிளையில் அமர்ந்தன. பெருமை கொண்ட மயில் இன்னும் ஆடிக் கொண்டே இருந்தது. பாவம்! அது தனக்கு வரப்போகும் ஆபத்தை அறியவே இல்லை. வேடன், மயிலை நோக்கி வலையை வீசினான். மயில் வசமாக அகப்பட்டுக் கொண்டது. அது வலையினின்று விடுவித்துக் கொள்ள முயன்றது. உடலைக் குலுக்கியது; திமிறியது. எப்படி முயன்றும் அதனால் வலையி னின்றும் தப்ப முடியவில்லை. அதன் அழகிய தோகைகள் வலையில் சிக்கி உதிர்ந்து போயின. குரங்கு மயிலின் பரிதாப நிலையைப் பார்த்தது. அதற்கு மனம் இரங்கியது. அது திடு மெனத் தாவியது; வேடன் கையில் இருந்த ஆயுதத்தைப் பறித்துக் கொண்டு ஓடியது. குயிலும் கூகையும் கூரான அலகுகளால் வேடனைக் கொத்தின. திமிர்த்தாக்குதலைக் கண்ட வேடன், உதிர்ந்து கிடந்த தோகைகளை மட்டும் பொறுக்கிக் கொண்டு ஓடி விட்டான். மயில் வேடன் கையில் இருந்து தப்பியது.

**10 marks**

IEB Copyright © 2014

<u>பகுதி மூன்று</u>

3.1 <u>கீழ்வரும் பகுதியை நன்றாக படித்து பின்வரும் இலக்கணக் கேள்விகளுக்கு பதில் தருக.</u>

கோலாலம்பூருக்கு அருகே செலயாங் என்னும் குடியேற்றப் பகுதி ஒன்று உள்ளது. அது ஈப்போ செல்லும் வழியில், சுமார் 12 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. அங்கு கம்போங் நகோடா என்னும் ஒரு கிராமம் இருக்கிறது. அக்கிராமத்தில் திருமதி மைமூனா வாழ்ந்து வருகிறார்.

3.1.1 பெயர்ச்சொல் என்றால் என்ன ? (1)

3.1.2 மேற்கொண்ட பகுதியிலிருந்து நாங்கு ( 4 ) பெயர்ச்சொற்கள் தருக (4)

3.1.3 வினைச்சொல் என்றால் என்ன (1)

3.1.4 மெற்கொண்ட பகுதியிலிருந்து இரண்டு வினைச்சொற்கள் தருக (2)

3.2 <u>சேர்த்து எழுது.</u>

3.2.1 முக்கிய + செய்தி (1)

3.2.2 அந்த + கதை (1)

3.2.3 மா + மரம் (1)

3.3 <u>பிரித்து எழுது</u>

3.3.1 இந்தப்பெண் (1)

3.3.2 மாஞ்செடி (1)

3.3.3 இரண்டாயிரம் (1)

3.4 <u>எதிர்ச் சொற்கள்</u>

3.4.1 பகல் (1)

3.4.2 இன்பம் (1)

3.4.3 பெரிய (1)

3.5 <u>ஆண்பாலுக்கு பெண்பால் எழுதுக</u>

3.5.1 அரசன் (1)

3.5.2 திருடன் (1)

3.5.3 கிழவர் (1)

3.6 சரியான சொற்களை நிறப்புக

3.6.1 ம __ சள் ( ஞ ஞ் ) (1)

3.6.2 மர __கள் ( ங ங் ) (1)

3.6.3 பய __ ம் ( ண ண் ) (1)

3.7 கீழ்வரும் சொற்களில் எச்சொல் பொருத்தமானதல்ல.

3.7.1 க், ஆ, ச், ட், ம், (1)

3.7.2 இலை, பூ, செடி, பழம் (1)

3.7.3 எதிர்ச்சொல், பெயர்ச்சொல், காலம், வினைச்சொல் (1)

3.8 வரிசையாக எழுதுக

3.8.1 ஓ, ஆ, ஈ, உ, ஏ, ஐ, அ, ஒ, ஔ, இ, ஊ, (1)

3.8.2 ஈகை, அம்மா, எலி, ஆடு, ஐயா (1)

3.9 காலம் சரியாக எழுதுக.

| | நிகழ்காலம் | கடந்தகாலம் | எதிர்காலம் | |
|---|---|---|---|---|
| 3.9.1 | நான் ஓடுகிறேன் | ______________ | நான் ஓடுவேன் | (1) |
| 3.9.2 | நீ பாடுகிறாய் | ______________ | நீ பாடுவாய் | (1) |

**30 marks**

**Total: 70 marks**

IEB Copyright © 2014